இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் 03 பரீட்சை - 2026 யூலை

## (3801) நிதி அறிக்கையிடல்

பரீட்சார்த்திகளால் விடப்பட்ட பொதுவான தவறுகளில் பெரும்பாலானவை அடையாளங் காணப்பட்டன. வெற்றிபெறாத பரீட்சார்த்திகள் அவர்கள் விட்ட தவறுகளை அடையாளங் காண வேண்டும் என்பதுடன் எதிர்காலப் பரீட்சைகளில் வெற்றியடையும் பொருட்டு அனைத்துக் கோட்பாடுகள் பற்றியும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

## பகுதி A

### வினா இல. 01

**(a)** பரீட்சார்த்திகள் மத்தியில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க பலவீனமாக இருந்தது பரீட்சை செயல் வினைச் சொற்களைத் தவறாகப் புரிந்து கொண்டிருந்தமை ஆகும். இது தேவையான ஆழம் மற்றும் பிரயோக மட்டத்துடன் விடைகளை அளிக்கின்ற அவர்களின் ஆற்றலைப் பாதகமான முறையில் பாதித்திருந்தது. குறிப்பாக இந்தப் பிரச்சினை வினா 1(a) இல் தெளிவாகத் தெரிந்தது. அங்கு, நிதித் தகவல்களின் அடிப்படைத் தர ரீதியான பண்புகள் (அதாவது தொடர்புடைமை மற்றும் உண்மையான பிரதிநிதித்துவங்கள்) குறித்த வரையறுக்கப்பட்ட ஒட்டுமொத்தப் புரிதலையே பரீட்சார்த்திகள் வெளிப்படுத்தியிருந்தனர். பல பரீட்சார்த்திகள் எண்ணக்கருக்களின் நடைமுறைப் பிரயோகத்தை வெளிப்படுத்தும் துல்லியமான, தொழினுட்ப ரீதியாகப் பொருத்தமான பதில்களை வழங்கியிருந்தனர்.

**(b)** இந்தப் பகுதிக்கு வழங்கப்பட்ட விடைகள் பொதுவாக திருப்திகரமாக அமைந்திருந்தன. எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் தொடர்ந்தியங்கும் என்ற எண்ணக்கரு பற்றிய தவறான புரிதலை வெளிப்படுத்தியதால், அதன் பொருளையும் பிரயோகத்தையும் போதுமானளவு விபரிக்க முடியவில்லை.

### வினா இல. 02

**(a)** நிலைபேற்றுத்தன்மை அறிக்கையிடலின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் விவரிப்பதில் பரீட்சார்த்திகள் மோசமான செயலாற்றுகையை வெளிப்படுத்தியிருந்தனர். ஒரு நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை தொடர்பான தாக்கங்கள், இடர்கள் மற்றும் வாய்ப்புகள் தொடர்பான தகவல்களை வழங்குவது உள்ளிட்ட நிலைபேற்றுத்தன்மை அறிக்கையிடலின் பரந்த நோக்கத்தையும் நாட்டதாரர்களுக்கான அதன் பொருத்தத்தையும் ஒரு சில மாணவர்களால் மாத்திரமே எடுத்துரைக்க முடிந்திருந்தது.

**(b)** SLFRS-S 1 – நிலைபேற்றுத்தன்மை வெளிப்படுத்துகை நியமங்கள் தொடர்பான அறிவிலும் பரீட்சார்த்திகள் குறிப்பிடத்தக்க குறைபாட்டையே வெளிப்படுத்தியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகளால் அந்த நியமத்தின் கீழ் எதிர்பார்க்கப்படும் மூன்று பொதுவான தேவைகளை அடையாளங்காண முடியவில்லை.

ஒட்டுமொத்தத்தில், இது நிதி அறிக்கையிடல் பாடத்திட்டத்தில் முக்கியமான பகுதியாக இருந்த போதிலும், நிலைபேற்றுத்தன்மை அறிக்கையிடல் மற்றும் SLFRS-S 1 இன் தேவைப்பாடுகள் குறித்து போதுமானளவு கவனம் செலுத்தப்படாததை இந்த வினாவுக்கான செயலாற்றுகை சுட்டிக்காட்டுகிறது.

**வினா இல. 03**

பரீட்சார்த்திகள் கணக்கீட்டு மென்பொருள் தொழிற்பாடுகள் மற்றும் இயலுமைகள் பற்றிய குறைந்தளவு புரிதலையே வெளிப்படுத்தியிருந்தனர். கணக்கீட்டு மென்பொருளின் தொழிற்பாடுகளுக்கும் கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடலின் தன்னியக்கத்தால் ஏற்படும் நன்மைகளுக்குமிடையே உள்ள வேறுபாடுகளை வேறுபடுத்தி அறிய இயலாமையே அடையாளங் காணப்பட்ட ஒரு பிரதான பலவீனமாக இருந்தது. தொழிற்பாடுகள் என்பவை, பரிவர்த்தனைகளைப் பதிவு செய்தல், கணக்கீட்டுப் பேரேடுகளைப் பராமரித்தல், வருமதி மற்றும் சென்மதிக் கணக்குகளை முகாமை செய்தல், வங்கிக் கணக்கிணக்கம், இருப்பு முகாமைத்துவம், பரீட்சை மீதிகளைத் தயாரித்தல் மற்றும் நிதி அறிக்கைகளை உருவாக்குதல் போன்ற கணக்கீட்டு மென்பொருளால் மேற்கொள்ளப்படும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் மற்றும் செயன்முறைகளைக் குறிக்கின்றன. இதற்கு மாறாக, தன்னியக்கத்தின் நன்மைகளில் மேம்பட்ட செயன்முறைப்படுத்தல் வினைத்திறன், குறைக்கப்பட்ட கைமுறையான வழுக்கள், மேம்பட்ட தரவு மாறாத்தன்மை, உரிய நேர அறிக்கையிடல், நிதித் தகவல்களை எளிதில் அணுகுதல் போன்றவை அடங்கும்.

**வினா இல. 04**

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் இந்த வினாவின் தேவைகளைச் சரியாக விளங்கி, பொருத்தமான விடைகளை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், ஒரு சில பரீட்சார்த்திகள் இவ்வினாவைச் சரியாக அணுகியிருக்கவில்லை என்பதுடன் பங்குடமை மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனம் போன்ற சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்தனர். அவை இவ்வினாவுடன் தொடர்புடையவை அல்ல.

**(b)** நிதி அறிக்கையிடலில் கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம் தொடர்பில், பரீட்சார்த்திகளால் பொதுவாக பரந்தளவான அல்லது பொதுவான விளக்கங்களை வழங்க முடிந்தது; எவ்வாறாயினும், பதில்களில் தொழினுட்ப ஆழமும் நடைமுறைப் பொருத்தப்பாடும் குறைவாகவே இருந்தன. கணக்கீட்டு நியமங்கள் நிதி அறிக்கையிடலில் மாறாத்தன்மை, ஒப்பிடக்கூடியதன்மை, வெளிப்படைத்தன்மை, நம்பகத்தன்மை மற்றும் விசுவாசமான பிரதிநிதித்துவம் ஆகியவற்றை எவ்வாறு ஊக்குவிக்கின்றன என்பதையும், அதே நேரத்தில் முதலீட்டாளர்கள், கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய நாட்டதாரர்கள் தகவலறிந்த தீர்மானமெடுப்பதை எவ்வாறு எளிதாக்குகின்றன என்பதையும் பரீட்சார்த்திகள் புரிந்துகொள்ள வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. பதில்கள் பெரும்பாலும் கணக்கீட்டு நியமங்களை ஏற்றுக்கொள்வதை நடைமுறை நிதி அறிக்கையிடல் விளைவுகளுடன் போதுமானளவு இணைக்காது, பொதுவான கூற்றுக்களையே கொண்டிருந்தன.

## பகுதி B

### வினா இல. 05

இவ்வினாவானது நேரில் முறையைப் பயன்படுத்தி 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒரு கம்பனியின் காசுப் பாய்வுக் கூற்றைத் தயாரிக்குமாறு பரீட்சார்த்திகளைக் கேட்டிருந்தது. பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை நன்றாக இருந்ததுடன் பின்வரும் விடயங்களும் அவதானிக்கப் பட்டன:

(1) சில பரீட்சார்த்திகள் வரிக்கு முன்னரான இலாபமாக 2026 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்குப் பின்னரான இலாபத்தை எடுத்திருந்தனர். இதனால் விடை பிழைத்திருந்தது.

(2) சில பரீட்சார்த்திகள் விற்பனை வருமானத்தைப் புறந்தள்ளி, இயந்திர விற்பனை மீதான நட்டத்தைக் கணிப்பிட்டிருந்தனர்.

(3) சில பரீட்சார்த்திகள் ஆண்டிற்கான வருமான வரிச் செலவினத்தை, ஆண்டிற்கான வருமான வரிக் கொடுப்பனவாகக் கருதியிருந்தனர்.

(4) சிலர் ஆண்டிற்கான பணிக்கொடைக் கொடுப்பனவு ரூ. 250,000/- ஐக் கருத்திற் கொள்ளாது, ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடாக ரூ. 70,000/- ஐக் கணிப்பிட்டிருந்தனர்.

(5) சில பரீட்சார்த்திகள் கைக்கொள் இலாபக் கணக்கைக் கருத்திற் கொள்ளாது, பிழையாக இடைக்காலப் பங்கிலாபக் கொடுப்பனவைக் கணிப்பிட்டிருந்தனர்.

(6) சிலர் ஆண்டின் காலப்பகுதியிலான PPE இன் கொள்வனவைப் பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(7) தொழிற்படு மூலதனத்தின் குறைவு அல்லது அதிகரிப்பு தவறாக இனங்காணப்பட்டிருந்தது.

### வினா இல. 06

**(a)** வருமான ஏற்பிசைவு - பரீட்சார்த்திகள் பெருமளவில் திருப்திகரமற்ற விடைகளை வழங்கிய மற்றுமொரு பகுதி இதுவாகும்.

(1) தனித்தனியான செயலாற்றுகைக் கடப்பாடுகளுக்கு தொகுக்கப்பட்ட விலையை சரியாக ஒதுக்கீடு செய்வதில் தோல்வியடைந்திருந்தனர்.

(2) தவறான வருமான ஏற்பிசைவு (ஒரு காலப்பகுதியில் *எதிர்* குறிப்பிட்ட காலப்பகுதிக்கு).

வருமான ஏற்பிசைவுக்குப் பயன்படுத்தப்படும் ஐந்து படிமுறை மாதிரியின் நடைமுறைப் பிரயோகத்தைப் பரீட்சார்த்திகள் முழுவதுமாக புரிந்துகொள்ளத் தவறியதாகத் தெரிகிறது. இதற்கு அதிக முக்கியத்துவம் தேவைப்படுகிறது.

**(b)** நியமத்தின்படி, 2026 மார்ச் 31 இல் மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்பெறுகைக் கிரயத்தை இனங்காணுமாறு இவ்வினாவில் கேட்கப்பட்டது. பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெறாததற்கு பின்வருவன காரணங்களாக அமைந்திருந்தன:

(1) கடன் பயன்பாட்டுக் காலம் சரியாக அடையாளங் காணப்படவில்லை. குறிப்பாக நிருமாணத்தின் தொடக்கத் திகதி கருத்திற் கொள்ளப்படவில்லை.

(2) பல பரீட்சார்த்திகள் அதன் நிருமாணக் காலப்பகுதியை விட முழு நிதியாண்டிற்குமான வட்டியை எடுத்திருந்தனர்.

(3) பரீட்சார்த்திகள், காலப்பகுதியில் செயற்பாட்டில் இல்லாத, தவறான முதல் தொகையை பொதுக் கடன்பெறுகையாக எடுத்திருந்தனர்.

(4) தற்காலிக முதலீட்டு வருமானத்திற்கான தவறான செய்கை அல்லது முதலீட்டு வருமானத்தை இனங்காணவில்லை.

**வினா இல. 07**

**(a)** பிற்போடப்பட்ட வரி - வருமான வரி தொடர்பான தற்காலிக வேறுபாடுகள் பற்றிய புரிதல் போதுமானதாக இல்லாத காரணத்தால், இந்த வினாவுக்கு, அதிகமான பரீட்சார்த்திகள் போதிய புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். பெரும்பாலான பரீட்சார்த்திகள் காணிக்கான தற்காலிக வேறுபாட்டைச் சரியாக இனங்கண்டிருந்தனர். ஆனால் மோட்டார் வாகனம் மற்றும் பணிக்கொடை ஏற்பாட்டிற்கான சரியான கணிப்பீட்டை மேற்கொள்ளத் தவறியிருந்தனர். மிகவும் குறைந்தளவான பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றுக் கொண்டனர். கணிப்பீட்டைச் சரியாகச் செய்திருந்த சில பரீட்சார்த்திகள், பிற்போடப்பட்ட வரி மீதியின் வகையை ஒரு சொத்தாக அல்லது ஒரு பரிப்பாக அடையாளங் காணத் தவறியிருந்தனர்.

**(b)** அறிக்கையிடல் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள் - இந்த வினாவுக்கு திருப்திகரமான செயலாற்றுகை அவதானிக்கப்பட்டது. அதிகளவான மாணவர்கள் தரப்பட்ட சூழ்நிலையையும் சீராக்கல் நிகழ்வுகளையும் சரியாக இனங்கண்டிருந்தனர். இருந்தபோதிலும், ஒரு சில மாணவர்கள் மாத்திரமே தங்கள் தீர்மானத்திற்கான வலிதான காரணங்களை போதுமானளவு விளக்கி, முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

## <u>பகுதி C</u>

**வினா இல. 08**

**என்ன பரீட்சிக்கப்பட்டது:**

(1) இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் கூற்று, நிதி நிலைக் கூற்று மற்றும் பிரசுரிப்புக்குப் பொருத்தமான வடிவத்தில் உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று ஆகியவற்றைத் தயாரித்தல்.

(2) இருப்பு மதிப்பீடு, ஆதனம், பொறி மற்றும் உபகரணம், தேய்மானம், சொத்துகளின் விற்பனை, வியாபார வருமதிகளின் சேத இழப்பு, வரி விதிப்பு மற்றும் நிலுவையாகவுள்ள செலவினங்கள் ஆகியவை தொடர்பான ஆண்டிறுதிச் சீராக்கங்களின் பிரயோகம்.

(3) பயன்பாட்டு உரிமைச் சொத்து, குத்தகைப் பொறுப்பு மற்றும் நிதிக் கிரயம் ஆகியவற்றின் அளவீடு உள்ளிட்ட ஒரு நிதிக் குத்தகைக்கான கணக்கீடு.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளைத் தயாரித்தல்.

**செயலாற்றுகை திருப்தியாக இல்லாமல் இருப்பின், அதற்கான சாத்தியமான காரணங்கள்:**

(1) அண்ணளவாக 40% ஆன பரீட்சார்த்திகள் குத்தகைத் தேய்வு அட்டவணையைத் தயாரிக்காது, மொத்தக் குத்தகை தவணைக் கட்டணங்களின் இற்றைப் பெறுமதியைக் கவனத்திற்கொண்டு,

குத்தகைப் பொறுப்பைக் கணிப்பிட முயன்றிருந்தனர். இதன் விளைவாக, பொருத்தமான வட்டிக் கட்டணம் மற்றும் இறுதிக் குத்தகைப் பொறுப்பு என்பன சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(2) பயன்பாட்டு உரிமைச் சொத்தினை அதிகளவான பரீட்சார்த்திகள் அடையாளங் கண்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் பயன்பாட்டு உரிமைச் சொத்தின் பெறுமதியைத் தீர்மானிக்கும் போது ஆரம்ப குத்தகைப் பொறுப்பை மாத்திரம் கருத்திற் கொண்டிருந்தனர். அவர்கள் குத்தகையின் தொடக்கத்தில் செய்யப்பட்ட ஆரம்பக் கொடுப்பனவை உள்ளடக்கத் தவறியிருந்தனர். இதன் விளைவாக, பயன்பாட்டுரிமைச் சொத்து குறைத்துக் குறிப்பிடப்பட்டது.

(3) 40% இற்கும் அதிகமான பரீட்சார்த்திகள் சீராக்கப்பட்ட சொத்துகள் மீதான, குறிப்பாக விற்பனை செய்யப்பட்ட இயந்திரம் மற்றும் குத்தகைக்குப் பெறப்பட்ட மோட்டார் வாகனம் ஆகியவை மீதான சரியான தேய்மானத்தை கணிப்பிடத் தவறியிருந்தனர். இந்த வழுக்கள் நிதி நிலைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட இலாப அல்லது நட்ட மற்றும் முன்கொணரற் தொகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தின.

(4) சில பரீட்சார்த்திகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் விற்பனை மீதான ஆதாயத்தை இலாபம் அல்லது நட்டத்தில் ஏற்பிசைவு செய்வதற்குப் பதிலாக பிற முற்றடக்க வருமானத்தில் தவறாக ஏற்பிசைவு செய்திருந்தனர்.

(5) அதிகளவான பரீட்சார்த்திகள் வியாபார வருமதிகளின் சேத இழப்பின் கணிப்பீட்டில் போதுமானளவு புரிதலை வெளிக்காட்டியிருக்கவில்லை. பொதுவான பிழைகளில், விடுதொகையைக் கணிப்பிடுவதற்கு முன்பு, குறிப்பாக அடையாளங் காணப்பட்ட மீட்கப்பட முடியாத கடனைப் பதிவழிப்புச் செய்யத் தவறியமை, மொத்த வியாபார வருமதிகள் மீதிக்கு 10% விடுதொகையைப் பிரயோகித்தமை மற்றும் ஏற்கனவேயுள்ள விடுதொகையை முறையாகச் சரிசெய்யத் தவறியமை ஆகியவை அடங்கும்.

(6) கிட்டத்தட்ட 30% பரீட்சார்த்திகள் நிதி நிலைக் கூற்றில் முன்வைக்கப்பட வேண்டிய ஆண்டிற்கான வருமான வரிச் செலவினத்தையும் அதனுடன் தொடர்புடைய வருமான வரிப் பரிப்பையும் சரியாக அடையாளங் கண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் ஆண்டின் காலப்பகுதியில் செலுத்தப்பட்ட வரியை நடப்பாண்டு வரிச் செலவினமாகக் கருதியிருந்தனர்.

(7) சில பரீட்சார்த்திகள் அட்டுறுவான வட்டி வருமானம் மற்றும் நிலுவையிலுள்ள கணக்காய்வுக் கட்டணம் ஆகியவற்றைச் சரியாகக் கணக்கிற் கொள்ளவில்லை அல்லது புறந்தள்ளியிருந்தனர்.

**செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான உதவிக் குறிப்புகள்:**

(1) பரீட்சார்த்திகள் பலதரப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஆண்டிறுதிச் சீராக்கங்களை ஒருங்கிணைக்கும் முற்றடக்க நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான வினாக்களைப் பயிற்சி செய்தல் வேண்டும்.

(2) குத்தகைத் தேய்மான அட்டவணைகளைத் தயாரித்தல், முதல் மற்றும் வட்டிக் கூறுகளை வேறுபடுத்தல், மற்றும் குத்தகை தொடங்கும்போது அல்லது தொடங்குவதற்கு முன் செய்யப்பட்ட கொடுப்பனவுகளைக் கருத்திற்கொண்டு பயன்பாட்டுரிமைச் சொத்தை அளவிடுதல் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(3) பரீட்சார்த்திகள் தேய்மானச் சீராக்கங்கள், சொத்து விற்பனைகள் மற்றும் விற்பனை மீதான ஆதாயங்கள் அல்லது இழப்புகளை இலாப, நட்டத்தில் முறையாகக் குறிப்பிடுவது குறித்த தங்கள் புரிதலை வலுப்படுத்த வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள் விற்பனைக் கிரயத்தில் இருப்பு மதிப்புக் குறைப்புகளின் பொருத்தமான வகைப்பாடு உட்பட அவற்றின் கணக்கீட்டுச் செய்கையைத் திருத்தம் செய்ய வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் குறிப்பாக அடையாளங் காணப்பட்ட மீட்கப்பட முடியாத கடன்களை முதலில் பதிவழிப்புச் செய்து, பின்னர் சீராக்கம் செய்யப்பட்ட வருமதிகள் மீதியின் அடிப்படையில் தேவையான விடுதொகையைக் கணக்கிடுவதன் மூலம் வியாபார வருமதிகள் சேத இழப்பு கணிப்பீடுகளைப் பயிற்சி பெறுதல் வேண்டும்.

(6) பரீட்சார்த்திகள் நடப்பு ஆண்டு வருமான வரிச் செலவினம், முந்தைய காலப்பகுதி தொடர்பான வரிக் கொடுப்பனவுகள் மற்றும் இறுதி வருமான வரிப் பரிப்பு ஆகியவற்றுக்கு இடையே தெளிவான வேறுபாட்டைக் காட்ட வேண்டும்.

(7) தமது விடைகளை நிறைவு செய்வதற்கு முன், பரீட்சார்த்திகள் அனைத்துச் சீராக்கங்களும் தொடர்புடைய அனைத்து நிதிக் கூற்றுக்களிலும் ஆதரவுக் குறிப்புகளிலும் முறையாகப் பிரதிபலிக்கப்பட்டுள்ளனவா என்பதை மீளவும் சரிபார்த்தல் வேண்டும்.

## வினா இல. 09

கிட்டத்தட்ட 90% பரீட்சார்த்திகள் வினா 09 இற்கு விடையளிக்க எத்தனித்திருந்த அதே வேளை எஞ்சிய 10% பரீட்சார்த்திகள் வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்காது அல்லது **பகுதிகள் (a), (b)** இற்கு விடையளிக்க முயற்சிக்காது காணப்பட்டனர்.

### பகுதி (a):

பகுதி (a) இற்கு விடையளிக்க முயற்சித்த பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் நடப்பு விகிதத்தைத் தவிர், தேவையான விகிதங்களைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

ஏறத்தாழ 20% பரீட்சார்த்திகள் நடப்பு விகிதத்தைச் சரியாகக் கணிப்பிடவில்லை. இந்தப் பரீட்சார்த்திகள் நடப்பு விகிதத்திற்கான சரியான சூத்திரத்தைக் எழுதியிருந்த போதிலும், அவர்கள் கணிப்பீட்டை மேற்கொள்ளும்போது அனைத்து சம்பந்தப்பட்ட நடைமுறைச் சொத்துக்களையும் நடைமுறைப் பரிப்புகளையும் கவனத்திற்கொள்ளத் தவறியிருந்தனர்.

நடப்பு விகிதத்தைத் தவறாகக் கணித்திருந்த பரீட்சார்த்திகள் மத்தியில், பெரும்பாலானவர்கள் நடப்பு விகிதத்தை விரைவு விகிதத்துடன் சேர்த்துக் குழப்பியிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இதன் விளைவாக கணிப்பீடு தவறான விடையை அளித்திருந்தது.

### பகுதி (b)

அதிகளவான பரீட்சார்த்திகள் இதற்குக் கிடைக்கக்கூடிய புள்ளிகளில் கிட்டத்தட்ட 50% ஐப் பெற்றுக்கொண்டிருந்த போதிலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் பகுதி (b) தேவைப்படுத்தியது பற்றிய போதிய புரிதலைக் கொண்டிருக்கவில்லை.

அதிகளவான பரீட்சார்த்திகள் கணிப்பிடப்பட்ட விகிதங்களை சம்பந்தப்பட்ட தொழிற்றுறை விகிதங்களுடன் ஒப்பீடு செய்திருந்தனர் ஆயினும் அடையாளங் காணப்பட்ட வேறுபாடுகளுக்கான பொருத்தமான சாத்தியமான காரணங்களை வழங்கத் தவறியிருந்தனர்.

பரீட்சார்த்திகளில் ஒரு சிறிய சதவீதத்தினர் மாத்திரமே விகிதங்களை முன்னைய ஆண்டின் விகிதங்களுடன் ஒப்பிட்டு, இரண்டு ஆண்டுகளுக்கும் இடையேயான மாற்றங்கள் பற்றிய பகுப்பாய்வை வழங்கியிருந்தனர்.

**பரிந்துரை:**

விடையளிப்பதற்கு முன்னர், ஒவ்வொரு வினாவின் தேவையையும் கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ளுமாறு பரீட்சார்த்திகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. தேவையான கணிப்பீடுகளை மாத்திரம் மேற்கொள்வதை விட, பொருத்தமான விளக்கங்கள், ஒப்பீடுகள் மற்றும் காரணங்களை வழங்க வேண்டியதன் அவசியம் உட்பட வினாவின் குறிப்பான தேவைகளுக்கு சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

**வினா இல. 10**

கையகப்படுத்தலினால் எழுகின்ற நன்மதிப்பு மற்றும் 2026 மார்ச் 31 இலான ஒன்றித்த நிதி நிலைக் கூற்று ஆகியவற்றைக் கணிப்பிடுமாறு இவ்வினா கேட்டிருந்தது. பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன:

(1) அதிகமானவர்கள் காணி மீள்மதிப்பீட்டை சரியாகக் கணக்கிற் கொள்ளாததன் காரணமாக சில பரீட்சார்த்திகள் மாத்திரமே நன்மதிப்புத் தொகையைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(2) சில பரீட்சார்த்திகள், கையகப்படுத்தல் மீதான நன்மதிப்பைக் கணிக்கும்போது நன்மதிப்பின் சேத இழப்பை எடுத்திருந்தனர்.

(3) அதிகமான பரீட்சார்த்திகள் ஒருங்கிணைந்த இருப்புப் பெறுமதியைக் கணிப்பிடும்போது இடைவழியிலுள்ள இருப்பு மற்றும் தேறாத இலாபம் ஆகியவற்றுக்கான சீராக்கங்களை மேற்கொண்டிருக்கவில்லை.

(4) மிகச் சில பரீட்சார்த்திகள் மாத்திரமே ஒருங்கிணைந்த கைக்கொள் இலாபம் மற்றும் கட்டுப்பாடற்றோர் நாட்டம் ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(5) அதிகளவான பரீட்சார்த்திகள் நன்மதிப்புச் சேத இழப்பைச் சரியாக விகிதாசாரப்படுத்தவில்லை.

**பரிந்துரை:**

பரந்தளவான ஒருங்கிணைந்த வினாக்களைப் பயிற்சி செய்யுமாறு பரீட்சார்த்திகளுக்கு வலுவாக அறிவுறுத்தப்படுகிறது. வழக்கமான பயிற்சி ஒருங்கிணைந்த சீராக்கங்கள் குறித்த அவர்களின் புரிதலையும் பிரயோகத்தையும் வலுப்படுத்தவும் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அவர்களின் ஆற்றலை மேம்படுத்தவும், அதிக புள்ளிகளைப் பெறவும் உதவும்.

\- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக் கொள்ளும் மட்டத்தை அபிவிருத்தி செய்வதில் கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:**

(1) பல பரீட்சார்த்திகள் விடைத்தாளில் வினா இலக்கங்களைக் குறிப்பிடவில்லை.

(2) பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி ஒரு புதிய வினாவுக்கான விடையை ஒரு புதிய பக்கத்தில் எழுத ஆரம்பிக்கவில்லை.

(3) வினாத்தாளை வாசிக்க ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் அனைத்து வினாக்களையும் வாசிப்பதோடு, பரீட்சார்த்திகளுக்கு சௌகரியமான வினாக்களிலிருந்து விடையெழுத ஆரம்பிக்க வேண்டும்.

(4) பரீட்சார்த்திகள் ஏஏரீ இன் கற்றல் புத்தகத்தை கற்க வேண்டும் என்பதுடன் அதில் தரப்பட்டுள்ள உதாரணங்களைச் செய்து பார்த்து பயிற்சி பெறுதல் வேண்டும்.

(5) பரீட்சார்த்திகள் சாத்தியமான நேரங்களில் கடந்தகால வினாத்தாள்களை அதற்காக ஒதுக்கப்பட்ட நேரத்தினுள் செய்து பார்த்து பயிற்சி பெறுவதுடன் நேர முகாமைத்துவத்திலும் பயிற்சி பெறுதல் வேண்டும்.

(6) வினாக்களைக் கவனமாக வாசிப்பதுடன் வினாவில் வழங்கப்பட்ட செயல் வினைச் சொற்களுடன் வினாவில் கேட்கப்பட்டதைப் புரிந்து கொள்ளுமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

-***-